**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.**

**முன்னிலை :** செல்வி. சே.தா. ஆயிஷ் பேகம், பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2024ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் நாள் செவ்வாய்க்கிழமை

**இடைநிலை மனு எண்.5/2023-ன் அசல் வழக்கு எண்.145/2019**

1. திரு.பூங்காவனம் (இறந்துவிட்டார்), த/பெ. திரு.மாசிலாமணி.
2. திருமதி.லட்சுமி, க/பெ. திரு.பூங்காவனம்.
3. திருமதி.குமாரி, க/பெ. திரு.சுப்பிரமணி.
4. திருமதி.வசந்தா, க/பெ. திரு. ராஜேஷ்.
5. திரு.பழனி, த/பெ. திரு. மாசிலாமணி.
6. திருமதி.அமுதா, க/பெ.திரு. முனுசாமி.
7. திருமதி.சித்ரா, க/பெ. திரு. கஜேந்திரன்.
8. திருமதி. வேண்டா, க/பெ.திரு.தமிழன்.
9. திரு.முருகன், த/பெ. திரு. பூங்காவனம்.

..மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

/எதிர்/

1. திருமதி.மாணிக்கம்மாள், க/பெ. திரு. முனுசாமி.
2. திருமதி. சுசிலா, க/பெ. திரு. முனுசாமி.
3. திருமதி.ஜீவா, க/பெ. திரு. பெருமாள்.
4. திரு.தேவதாஸ், த/பெ. திரு. முனுசாமி.
5. திரு.தட்சிணாமூர்த்தி, த/பெ. திரு.முனுசாமி.
6. திரு.தண்டபாணி, த/பெ. திரு.முனுசாமி.

.. எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு 22.04.2024 தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது 1ம் மனுதாரர் இறந்துவிட்டார், 2 முதல் 9 வரையிலான மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.எஸ்.சங்கரபாண்டியன், அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே.விவேகானந்தன், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதத்தை ஏற்கனவே கேட்டறிந்தும், கோப்புகளை பரிசீலனை செய்தும் இன்று, இதுகுறித்து இந்நீதிமன்றம் வழங்கும்...

S D AYSH BEGUM
Digitally signed by S D AYSH BEGUM
Date: 2024.04.23 17:36:26 +0530

**<u>உத்தரவு</u>**

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1-3(எ) மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள ஆவணங்களை ஏற்று உத்தரவிட கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுதாரரின் மனு சுருக்கம்</u>:-**

மனுதாரர் இவ்வழக்கில் 9ம் பிரதிவாதி. இம்மனுவினை ஏனைய மனுதாரர்களுக்காகவும் தாக்கல் செய்துள்ளார். மனுவில் கண்டுள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்கு மிகவும் அவசியமான ஆவணங்களாகும். இந்த ஆவணங்கள் மற்ற ஆவணங்களுடன் கலந்துகொண்டதால் உரிய காலத்தில் ஆவணத்தை தாக்கல் செய்ய இயலவில்லை. வழக்கிற்கான ஆவணங்கள் தற்போது தான் மனுதாரர்களுக்கு கிடைக்கப்பெற்றது. எனவே மனுவில் கண்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டது. ஆகவே இந்த மனுவோடு தாக்கல் செய்யும் ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களாக ஏற்று தக்க உத்தரவிட வேண்டும், இல்லையேல் மனுதாரர்கள் பல கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாவார்கள். மனுதாரர்கள் உரிமை பாதிக்கப்படும். ஆகவே மனு விவரப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களாக ஏற்று உத்தரவிட வேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>4ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு இதர எதிர்மனுதாரர்களால் ஏற்கப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்</u>:-**

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு பொய்யானது. இவ்வெதிர்மனுதாரர் மனுவில் கண்டுள்ள சங்கதிகளை மறுக்கிறார். வழக்கில் மனுதாரர்கள் இந்த நிலையில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை கோப்பிற்கு பெற்றுக்கொள்ள கோரும் மனு ஏற்புடையது அல்ல. மனுதாரர்கள் வழக்கில் எதிருரை தாக்கல் செய்தபோது ஆவணங்களை தாக்கல் செய்யாமல் வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இம்மனுவினை தாக்கல் செய்து அதில் குறிப்பிட்டுள்ள காரணங்கள் ஏற்புடையது அல்ல. தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் தாவா சொத்திற்கான ஆவணங்கள் இல்லை. வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள போலியான ஆவணங்கள். தாக்கல் செய்யப்பட்டுள்ள பட்டா தாவா சொத்திற்கானது அல்ல. வழக்கில் ஏற்பட்டுள்ள குறைகளை நிவர்த்தி செய்யவும் வழக்கினை காலம்

S D AYSH BEGUM
Digitally signed by S D AYSH BEGUM
Date: 2024.04.23 17:37:50 +0530

கடத்தவும் மனுதாரர்கள் தரப்பில் இந்நிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு ஏற்புடையது அல்ல. எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தற்பொழுது தீர்மானம் செய்யவேண்டியது மனுதாரர்களின் மனு, அனுமதிக்கப்படக்கூடியதா? என்பதே ஆகும். இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது.

5. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் மனுதாரர்கள் தங்களது வழக்கை நிரூபனம் செய்ய அவசிய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி ஆவணங்கள் வேறு ஆவணங்களோடு கலந்துவிட்டதால் உரிய நேரத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை. மேற்படி மனுவோடு தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பை நிரூபனம் செய்ய அவசிய ஆவணமாகும் எனவே இம்மனுவினை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

6. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. வழக்கிற்கு பின்னிட்டு போலியாக ஏற்படுத்தப்பட்டுள்ள ஆவணங்கள். எனவே இம்மனுவினை செலவுத்தொகையோடு தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

7. **தீர்வு** :-

இருதரப்பு வாதங்கள், மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்கள் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த மனுவின் மனுதாரர்கள் தனக்கு கிடைத்த ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய ஏற்பட்டுள்ள காலதாமதத்தை மன்னித்து மனுவினை அனுமதிக்க வேண்டியும், மனு அனுமதிக்கப்படவில்லை என்றால் பல கஷ்ட நஷ்டங்களுக்கு மனுதாரர்கள் உள்ளாவார் என்றும், இது குறித்து மனுதாரர்கள் தங்கள் வழக்கை நிரூபனம் செய்ய அவசிய ஆவணங்கள் என்றும் வாதிட்டுள்ளாாகள். எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இவ்வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணங்கள் என்றும் ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு போலியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் எனவே மனுவினை செலவுத்தொகையோடு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

S D AYSH BEGUM

Digitally signed by S D AYSH BEGUM
Date: 2024.04.23 17:38:10 +0530

8. மேற்படி மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை ஆராய்கையில் ஆவணங்கள் அனைத்தும் நீதிமன்ற சான்று நகல்களாக உள்ளது. மேற்படி ஆவணங்கள் அசல் வழக்கு எண்.191/2018-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிராது சான்றிட்ட நகல். மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை சான்றிட்ட நகல் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் சான்றிட்ட நகல் மற்றும் சாட்சியங்களின் சான்று நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் போலியாக உருவாக்கப்பட்ட ஆவணங்கள் என்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டுள்ளது. அதுகுறித்து சாட்சிய விசாரணை செய்யப்பட்டால்தான் தெரியவரும். எனவே எதிர்மனுதாரர்களின் ஆட்சேபனை தற்போது ஏற்புடையது அல்ல. மேற்படி ஆவணங்கள் குறித்து மனுதாரர்கள் தங்களது வழக்கை நிரூபனம் செய்ய ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டியது அவசியமாகிறது. மேற்படி ஆவணங்கள் குறித்து இம்மனுதாரர்களை எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்துகொள்ள வாய்ப்பு உள்ளது. எனவே நீதியின் நலன்பால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இந்த மனு அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. மனுவின் தன்மையை கருத்தில் கொண்டு உபய தரப்பினர்கள் மனுவின் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்கவேண்டியது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக,** இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்த பின்னர் 2024-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23-ம் நாளான இன்று இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

S D AYSH BEGUM
Digitally signed by S D AYSH BEGUM
Date: 2024.04.23 17:38:36 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சாண்றாவணங்கள்.</u>**

- இல்லை -

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சாண்றாவணங்கள்.</u>**

- இல்லை -

S D AYSH BEGUM
Digitally signed by S D AYSH BEGUM
Date: 2024.04.23 17:38:56 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு.